# ஜனவரியில் மெட்ரோ ரயில் சோதனை இயக்கம்

– நமது நிருபர் –

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் பாதையில், ஜனவரி இரண்டாவது வாரத்தில், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், அதிவேக ரயில் இயக்கி சோதனை நடத்த உள்ளார்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் சுரங்க பாதை பணி முடிந்து, ரயில் சோதனை ஓட்டம் நடந்து வருகிறது.

இப்பாதையில், ஜனவரி இறுதிக்குள், பயணியர் ரயில் இயக்க, மெட்ரோ நிர்வாகம் ஆர்வத்துடன் உள்ளது.



நிலைய கட்டுமான பாக்கி பணிகள் விரைவாக முடிந்தால், இம்மாதம், 28 மற்றும் 29ல், பாதுகாப்பு கமிஷனர், ரயில் இயக்கி சோதனை நடத்த அழைப்பதற்கு, மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டிருந்தது.

பயணியர் பயன்படுத்தும் அளவுக்கு, கட்டுமான பணிகள் முடிவடைய, மேலும், 10 நாட்கள் ஆகும் நிலை உள்ளது.

இதனால், பாதுகாப்பு கமிஷனர், ஜனவரி இரண்டாவது வாரத்தில், இரண்டு நாட்கள், விரைவு ரயிலை இயக்கி சோதனை நடத்த உள்ளார்.

இதன்பின், பாதுகாப்பு சான்றிதழ் அளித்ததும், ஜனவரி இறுதிக்குள், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் போக்குவரத்து நீட்டிக்கப்பட உள்ளது.